

அசோகா பிக்சர்ஸ்

# என் தங்கை

டைரக்ஷன்:- C.H.நாராயணமூர்த்தி & M.K.R.நம்பியார்.

# "என் தங்கை"

*தயாரிப்பு :*

அசோகா பிக்சர்ஸ், குகை, சேலம்.

*கதை :*

மூலகதை—வில்லன். T. S. நடராஜன்.
திரைக்கதை—Ch. நாராயணமூர்த்தி, B.A.

*வசனம் :*

வில்லன். T. S. நடராஜன், K. M. கோவிந்தராஜன்.

*பாட்டு :*

பாரதி தாசன், மருதகாசி, சரவணபவாநந்தர், சுரதா, ராஜ்கோபாலன், நரசிம்மன்.

*டைரக்ஷன் :*

Ch. நாராயணமூர்த்தி, B.A., M. K. R. நம்பியார்.

*எடிட்டிங் :*

Ch. நாராயணமூர்த்தி, B.A.

*சங்கீதம் :*

C. N. பாண்டுரங்கன்.

*பின்னணிப் பாட்டு :*

M. L. வசந்தகுமாரி, P. லீலா, A. P. கோமளா, K. V. ஜானகி, N. லலிதா, ரத்னமாலா, மோதி, ராஜா.

*நடன அமைப்பு :*

K. R. குமார்.

*ஸ்டுடியோ :*

நியூடோன், கீழ்பாக், சென்னை.

## "என் தங்கை"

### நடிகர்கள் :

| | |
|---|---|
| M. G. *ராமச்சந்திரன்* ... | ... ராஜேந்திரன் |
| P. S. *கோவிந்தன்* ... | ... சூரியமூர்த்தி |
| P. V. *நரசிம்ம பாரதி* ... | ... செல்வம் |
| M. G. *சக்ரபாணி* ... | ... கருணாகரம் பிள்ளை |
| T. R. B. *ராவ்* ... | ... வீராசாமிப் பிள்ளை |
| C. S. *பாண்டியன்* ... | ... அழகன் |
| S. N. *நாராயணசாமி* | ... வீரய்யன் |
| *மாஸ்டர் கிருஷ்ணன்* ... | ... இடியட் பாய் |

### நடிகைகள் :

| | |
|---|---|
| *மாதுரி தேவி* ... | ... ராஜம் |
| V. *சுசீலா* ... | ... மேரி |
| S. R. *ஜானகி* ... | ... குணவதி |
| E. V. *சரோஜா* ... | ... மீனா |
| M. N. *ராஜம்* ... | ... அழகி |
| *பொள்ளாச்சி கமலா*<br>M. R. *ராஜேஸ்வரி* } ... | ... நடனம் |

# "என் தங்கை"

## கதைச் சுருக்கம்

காஞ்சீபுரத்தில் வசிக்கும் ராஜேந்திரன் தன் தம்பி செல்வ ரத்தினத்தின் படிப்பிற்குக் கஷ்டப்பட்டுப் பணம் அனுப்பிக் கொண்டிருக்கிறான். சென்னையிலே செல்வம், ராஜம் என்ற கல்லூரி மாணவியைக் காதலிக்கிறான். ராஜேந்திரன் சித் தப்பா கருணாகரம் பிள்ளை வஞ்சக நெஞ்சினன். அவன் மகன் சூரியமூர்த்தி சென்னையிலே படித்துக்கொண்டிருக் கிறான். அவன் மேரி என்ற கிருஸ்துவப் பெண்ணைக் காத லிக்கிறான். ராஜேந்திரன் தன் தங்கை மீனாவின் கலியாணத் திற்கு ஏற்பாடு செய்கிறான். ஆனால் துரதிர்ஷ்டம் குறுக்கிடு கிறது. தோழியின் வீட்டிலிருந்து மழையிலே வரும்போது ஏற்பட்ட இடி மின்னலால் கண்களை இழந்து குருடியாகிறாள் மீனா. இதை யறிந்த செல்வம் துடித்துப்போய் வீடு திரும்பு கிறான்.

காதலன் செல்வத்தைத் தேடிக்கொண்டு ராஜம் தன் தந்தை வீராசாமிப் பிள்ளையுடன் காஞ்சிக்கு வருகிறாள். விரைவில் செல்வம் ராஜம் திருமணத்தை முடித்துவிட முடிவு செய் கின்றனர். முதலில் ராஜேந்திரனுக்குக் கலியாணம் செய்து பின் செல்வத்திற்குச் செய்யலாம் என்று சொன்ன தன் தாய் குணவதியிடம் தங்கைக்கும் தம்பிக்கும் திருமணம் செய்யாமல் தான் செய்துகொள்வதில்லை என்று சத்தியம் செய்கிறான் ராஜேந்திரன்.

பரீட்சையிலே பெயிலாகி வீடு திரும்பிய சூரியமூர்த்தி ராஜேந்திரன் குடும்பத்திற்குப் பல வழிகளிலும் உதவுகின்றான். சென்னை சென்றிருந்த செல்வம் தாயின் அபாய நிலைமையைத் தந்திமூலம் அறிந்து ஓடோடியும் வருகிறான். குணவதி இறந்துவிடுகிறாள். நாட்கள் பல உருண்டோடுகின்றன.

ஆண் உடையிலே சூரியமூர்த்தியைத் தேடிக்கொண்டு காஞ்சீ புரம் வருகிறாள் மேரி. வேறு ஜாதிப் பெண்ணைத் தன் மகன் கலியாணம் செய்துக்கொள்வதை விரும்பாத கருணா கரம் பிள்ளை மேரியை வீட்டைவிட்டு விரட்டுகிறார்.

தாய் இறந்தபோது சொன்ன வார்த்தையைக் காப்பாற்று வதற்காக வஞ்சக சித்தப்பாவிடம் வீட்டை அடகுவைத்துத் தம்பியின் கலியாணத்தை நடத்திவிடுகிறுன் ராஜேந்திரன். ஆரம்பத்தில் மீனுவின்மீது அன்பு மழை பொழிகிருள் ராஜம். நாளடைவில் அது மாறுதல் அடைகிறது. மீனுவைப் பல விதக் கொடுமைப்படுத்துகிருள். ஓர் நாள் தங்கையைத் தம்பி அடிக்கப்போவதைப் பார்த்துக்கொண்டுவந்த ராஜேந்திரன் கொதித்துப்போய்த் தம்பியை அடித்துவிடுகிறுன். இதையே காரணமாக வைத்துக்கொண்டு செல்வத்தைச் சென்னைக்கு அழைத்துச் செல்கிருள் ராஜம். அச்சாபீஸிலே வேலைசெய்துக் கொண்டிருந்த ராஜேந்திரனின் வேலையும் போய்விடுகிறது. வறுமையின் சீற்றம் நாளுக்கு நாள் அதிகமாகிறது.

சூரியமூர்த்தியை எதிர்பார்த்து ஏமார்ந்த மேரி பல கஷ்டங் களுக்குள்ளாகி கடலில் விழப்போகும்போது, ஒரு பாதிரியால் காப்பாற்றப்பட்டு நர்ஸாகிருள். வீராசாமிப் பிள்ளை செல்வத்தி னிடம் பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்துக் குதிரைப் பந்தயத் திற்கு அனுப்புகிருர். பணம் போய்விட்டதைக் கேள்விப்பட்ட வீராசாமிப் பிள்ளை மாரடைப்பால் மரணமடைகிருர். அன்றி லிருந்து செல்வம் குதிரைப் பந்தயத்தைத் தோழனுகக் கொள்கிறுன். கைப்பொருள் குறைந்துகொண்டே வருகிறது. கடைசியில் ராஜத்தின் தாலியையும் கேட்கிறுன் விற்பதற்கு.

வீராசாமிப் பிள்ளை இறந்ததை விசாரிக்க ராஜேந்திரன் சென்னை வருகிறுன். ராஜேந்திரனைக் கண்ட ராஜம் அவன் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கிருள். தம்பி கெட்டு விட்டதைப் பார்த்து மனமுடைந்து வீடு திரும்புகிறுன் ராஜேந் திரன். மேரி விஷயமாகத் தனக்கும் தந்தைக்கும் தகருறு ஏற் பட்டதால் வீட்டைவிட்டு வெளியேறுகிறுன் சூரியமூர்த்தி. தாலியை விற்பதற்குக் கேட்ட செல்வத்திடம் நியாயத்தை எடுத்துரைத்து அவனைத் திருந்தும்படி செய்கிறுன் ராஜம். அன்றுமாலை காரில் இருவரும் புறப்பட்டுச் செல்கிருர்கள். ஒரு விபத்து ஏற்பட்டு ராஜம் இறந்துவிடுகிருள். செல்வம் தன் கை, கால்களை இழந்து காஞ்சிபுரம் சென்று அண்ணன் காலடியில் விழுந்து உயிர் விடுகிறுன்.

கருணாகரம் பிள்ளையால் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்ட ராஜேந்திரனும் மீனாவும் வழியில் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு சென்னையை அடைகிறார்கள். அங்கு ரிக்ஷா இழுத்து கொண்டிருக்கும் சூரியமூர்த்தியைச் சந்திக்கின்றனர். மீனாவின் பசிக்குச் சாப்பாடு கொண்டுவரச் சென்ற சூரியமூர்த்தியைக் கருணாகரம் பிள்ளை சந்தித்து வீடு திரும்ப வேண்டுகிறார். மறுத்துச் செல்கிறான் மகன். பின் தொடர்ந்த கருணாகரம் பிள்ளை வேகமாக வந்த மோட்டாரினால் தாக்குண்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகிறார். அங்கு நர்ஸாக இருக்கிறாள் மேரி, அவளையும் அவனையும் மணம் செய்துகொள்ளும்படி சொல்லி உயிர்விடுகிறார் கருணாகரம் பிள்ளை.

வெகு நேரமாகியும் சூரியமூர்த்தி வராததைக் கண்ட ராஜேந்திரன் தங்கைக்கு ஆகாரம் கொண்டுவரக் கிளம்புகிறான். பெட்டித்தூக்கிக் கிடைத்த இரண்டணாவிற்குத் தோசை வாங்கித் திரும்பிய ராஜேந்திரன் வழியிலே பிச்சை கேட்ட நொண்டிக்கு அந்த தோசையைக் கொடுத்துவிட்டுத் திரும்பும் சமயம் ஒரு திருடன் அவன் கையில் பணப்பர்ஸை எறிந்துவிட்டு ஓடிவிடுகிறான். திருடனைத் துரத்தி வந்தவர்கள் ராஜேந்திரனைத் திருடனென மதித்து அடிக்கின்றனர். மீனா தன் அண்ணன் அடி படுவதைக் கேட்டுப் பொருக்காமல் தடுமாறி ஓடிவரும் பொழுது விழுந்து இறந்துவிடுகிறாள். ராஜேந்திரன் தங்கையைப் பார்க்க ஓடிவருகிறான். இறந்து கிடக்கும் தங்கையைப் பார்த்து, அழுதுவிட்டு அவளைத் தூக்கிக்கொண்டு கடலில் இறங்கி தானும் மடிந்து விடுகிறான். ராஜேந்திரனைத் தேடிவந்த மேரியும், சூரிய மூர்த்தியும் அண்ணன், தங்கை ஆகிய இருவர் சவங்களையும் பார்த்துக் கண்ணீர் விடுகின்றனர். அவர்களின் ஞாபகார்த்தமாக சூரியமூர்த்தியும், மேரியும் மீனா குருட்டுப் பெண்கள் பள்ளியை ஏற்படுத்தி நிர்வகித்து வருகின்றனர்.

சுபம்.

# "என் தங்கை"

## பாடல்கள்

### 1. ராஜம் & செல்வம்.

| | | |
|---|---|---|
| ராஜம் : | காதல் வாழ்விலே | |
| இருவரும் : | மகிழ்ந்தோம் கவலை தவிர்ந்தோம்—நாம் கவலை | |
| செல்வம் : | மாதர் என்னும் மலரும் ஆண்<br>மக்கள் என்னும் வண்டுங்குலவுங் | [காதல்] |
| ராஜம் : | தென்றலோடு வானும்<br>தேனூர் தமிழும் சுவையும் | |
| செல்வம் : | அன்றில் ஆணும் பெண்ணும் | |
| இருவரும் : | அணைவதான இணையில்லாத மெய்க் | [காதல்] |
| ராஜம் : | இளமைப் பருவமிரண்டும்<br>எழில்சேர் உள்ளமிரண்டும | |
| செல்வம் : | அளவளாவும் போதில் பொழியும்—நல்<br>அமுத மழையில நனைவதான மெய்க் | [காதல்] |
| செல்வம் : | அலையில் மிதந்து செல்லும்—எழில்<br>அன்னப் படகின் கோலம் | |
| ராஜம் : | நிலையில் நம்மை உயர்வு செய்து | |
| இருவரும் : | நினைவு முழுதும் இனிமை புரியும மெய்க் | [காதல்] |

*By*—பாரதி தாசன்.

### 2. மீனு கோரஸ் & டான்ஸ் பாட்டு.

| | |
|---|---|
| கோரஸ் : | தீம் தனதீம் ! தனதீம் தீம் தனதீம் !<br>தீம் தனதீம் ! தனதீம் தீம் தனதீம் ! |
| மீனு : | ஓ. . . . . . . . . . ஆ . . . . . . . . . . |
| கோரஸ் : | அழகாய் பொம்மை வைத்தே<br>கொலுவைச் சிங்காரித்தே<br>இனிதாய் எல்லோரும் கொண்டாடுவோம். |

கோரஸ் : ஜப்பான் பொம்மை ! ஜர்மன் பொம்மை !
சண்டை செய்யும் சிப்பாய் பொம்மை !

மீனு : தா . . . . தித்தா வென்றே நடம் புரியும் சிங்காரி போல்

கோரஸ் : சிலபுதுரக பொம்மை தான்
ஜிலு ஜிலு ஜிலு என்றே தான்
கொலு புரிந்திட செய்தே நாம்
மன மகிழ்ந்திடுவோம் ! [தீம்]

மீனு : வீதியெல்லாம் ஜோதி மயம் !
வீடு தோறும் திருவிழா !
வீணு வாணிதன்னைக் கொண்டாடும் பொன்விழா ! [தீம்]

மீனு : மாலைதனில் யாவருமே கூடுவோம் !
கூவும் மாங் குயிலைப் போல இசை பாடுவோம்
தோகை மயிலாக நடனமாடுவோம். [தீம்]

*By*—A. மருதகாசி.

## 3. குணவதி அம்மாள்.

[ஆரபி]

தீன தயாபரி தாயே—அம்பா
திருவாகும் உருவே நீ அருள்வாய் தேவி

மானில மதில் நீயே கதி—எனக்கிந்த
வகையேதும் அறியேன் கண் பாராய் தாயே

போதும் எனது துயர் போதும் நான் சகியேன்
புவியில் அருள்வாய் சுகமே.

[கல்யாணி]

தீராத துயராகினேன் நெஞ்சில்—(துயர்)
தீர்ப்பாயோ ஜக நாயகி
இகமீது வினையே ஓர் உருவாகினேன்
யாரிடம் சொல்வேன் நான்
எனது மன வேதனை
ஆதரி அன்னையே அருள் புரி [தீராத]

[ஸகானு]

கண்ணில்லா குழந்தையால் கலங்குகின்றேனே
காப்பதுவும் உனது கடமை என்றேனே
எண்ணில்லா வேதனை எனக்கினி ஏனே
எல்லாம் உன் செயல் என்றுணர்ந்தேனே

[சிட்டாஸ்வரம்]

மாமதிமுக விலாச தருணி—அதி
விநோத மோகினி
வாழ்வில் இன்பமாய் வாழ்ந்திட செய்தருள்
வனிதையான உனையல்லாது வேறே
துணையுமேது இணையுமேது திரிபுர
சுந்தரி சுதந்தரி பைரவி
தாயே கதி நீயே

*By*—சரவண பவாநந்தர்.

## 4. ராஜம் & செல்வம்.

[இராகம் : உதய ரவி சந்திரிகா. மிஸ்ரம்.]

ராஜம் : ஆடும் ஊஞ்சலைப் போலே
அலையே ஆடுதே !

செல்வம் : ஆறு வந்து கடலிலே சேருதே

ராஜம் : வாலிபம் போலே ஆசை வளருதே

செல்வம் : உன் விழியிலே நீலவானம் தெரியுதே— [ஆடும்]

ராஜம் : வாசனை தரும் சந்தனம் தனை
பூசிட யோசனை ஏனோ ?

செல்வம் : சம்மத மின்றி மலரின் மேலே
தாவும் வண்டு நானல்ல. [ஆடும்]

ராஜம் : நெளியும் பாம்பு போன்ற நதியின் அருகிலே

செல்வம் : நேற்று பாடிஆடினோமே இன்ப இரவிலே

ராஜம் : அது போலே

செல்வம் : இனிமேலே

இருவரும் : ஆனந்தம் அடைந்திடுவோமே [ஆடும்]

செல்வம் : நெஞ்சின் இன்பமே ! கொஞ்சும் கிளி நீயே !

ராஜம்: நம் நித்திரைக்கு மெத்தை கடற்கரையே

இருவரும் : காதலுக்கே அனுகூலமே
யௌவன காலமே
கனிரசமே.— [ஆடும்]

*By*—சுரதா.

## 5. அழகன் & அழகி.

அழகி : குட்லக் ! குட்லக் ! குட்லக் ! என் வாழ்விலே !

[வசனம்]

கட்டக் கந்தல் இல்லாத ஏழை
கஷ்டம் நீக்கும் குபேரன் ஆக்கும் !
முட்டாள் தன்னை முன்னேறச் செய்யும் !
எட்டுத்திக்கும் கொண்டாடவைக்கும் [குட்லக்]

[பாட்டு]

குடிசைதனிலே பிறந்தேன்
தெருவில் அலைந்தே திரிந்தேன்
அடிமை எனவே நுழைந்தேன்—வீட்டின்
அதிபதி போலே வாழ்கின்றேன் ! . . . . . [குட்லக்]

மொட்டைக் காளைபோலே—உடல்
கட்டும் கொண்ட மாரா !
கட்டுக் காவல் இல்லை—மனம்
விட்டுப் பேசலாம் வாராய் !

அழகன் : கட்டிவெல்லம் போலே ருசி
சொட்டும் பேச்சுக்காரி !
அட்டியில்லை ப்யாரி ! தேன்
லட்டுபோன்ற ஒய்யாரி !

அழகி : கற்கண்டே என்னன்பே கலிகால கந்தர்வா !
அர்ஜுண்டாய் இங்கேவா ! அழியாத இன்பம் தா !

அழகன் : பொன் வண்டே வந்தே நான் பொங்கும்
இன்பம் தந்திடுவேன்

அழகி : ஓடிவா !

அழகன் : எஸ் . . . . . . . . லேடியே !

இருவரும் . ஜோடியாய் விளை
யாடவே . . . . .

அழகன் : சந்தர்ப்பம் இன்றைக்கு நன்றாய் அமைந்ததே !
சந்தித்தே ஆனந்தம் கொள்ளத் தகுந்ததே !

இருவரும் : கருப்பும் காகமும் போலே—பெருங்
கசப்பும் வேம்பும் போலே
கரும்பும் எரும்பும் போலே
காதல் வாழ்விலிந்நாளே
கலந்து இணைந்து மகிழ்ந்து வாழ்வதுதான்—ஜாலி !

***By*—A. மருதகாசி.**

## 6. மீனு.

[இராகம் : கானடா]

மீளா துயரமோ மாதா மனமிளகாதோ

கண்களிரண்டும் இழந்தவள் பேதை
கவலேகளாலே களேத்தேன் இளேத்தேன்
பெண்ணெனில் பேயும் இரங்குமென் பாரே
பெண்ணேப் பெண் வாட்டும் பாதகம் பாரீர்

வீட்டை மெழுகிட வேண்டும்
வேட்டி துவைததிட வேண்டும்
மாவை அறைத்திட வேண்டும
மாடாய் உழைத்திட வேண்டும்

கவலேகள் மிகவாகுதே எந்தன்
கால்கள் தடுமாறுதே
காணேன் ஒரு வழியே கதி
கலங்கி வாடுறேன்—அம்மா, அம்மா, அம்மா

*By*—நரஸிம்மன்.

## 7. மேரி.

அன்னேயே அன்னேயே அன்னேயே
அருள் தாரும் மேரி தாயே
அன்னேயே அருள்தாரும் மேரிதாயே

ஊன் வினேயதாலே நானே
உள்ளம் உடைந்து நொந்தேன்
பாழும் சமூகம் என்னும
பலிபீடம தன்னில் விழ்ந்தேன்
கலேசேர் நிலாவை மறைத்திடும்
கார்மேகம் போல ஜாதி
மலேபோல் என் வாழ்வில தடையாய்
வந்து நின்றதே என் செய்வேன் [அன்னேயே]

ஆண் துணேயில்லாத பெண்கள்
அடைவாரே துன்பம் என்போல்
வான் மீதுலாவும் கிளிபோல்
மகிழ்வாக வாழ நினேத்தேன்
பாய்நதோடும் ஆற்றில் ஓடம் -
படும் பாட்டைப் போல ஆனேன்
தூய என்காதல் கனவோ
துயர் நிங்குமோ என் வாழ்வில்— [அன்னேயே]

*By*—கி. ராஜகோபாலன்.

## 8. ராஜம்.

இராகம் : கரகரப்பிரியா] [தாளம்—ஆதி

[பல்லவி]

இன்பமே சிறிதும் அறியாத பெண் ஜன்மம்
என்போல் உலகிலுண்டோ [இன்பமே]

[அனுபல்லவி]

துன்பம் என் வாழ்வினில் இல்லா நாளில்லை
என் எண்ணமெல்லாம் கனவானதே என்ன தொல்லை
[இன்பமே]

[சரணம்]

பேதை யாது செய்வேன் கண்ணில்லாத]
பெண்ணை பாவி நான் கலங்கிட செய்தேனே
முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையுமென்ற
மொழியின் உண்மையை இன்றே உணர்ந்தேனே.
[இன்பமே]

*By*—சரவண பவாநந்தர்.

## 9. சூரியமூர்த்தி & மேரி.

மேரி : என் இன்ப ஜோதியே ! உன் அன்புப் பார்வையால்
இன்பத் தென்றல் எந்தன் வாழ்வில் இசைந்தே வீசுதே!

சூரியமூர்த்தி : பாரில் நான் பாக்யசாலி !

மேரி : வாழ்வில் நான் பாக்யவதி !

சூரியமூர்த்தி : இன்பம் துன்பம்

மேரி : என்றும் ஒன்ருய்

சூரியமூர்த்தி : பங்கு கொள்வோம் !

மேரி : கண்ணும் கண்ணும் ஒன்றை யொன்று
கலந்த அந்நாளே !
கள்ளம் இல்லா காதல் கொண்டேன்
என்தன் கண்ணளா !

சூரியமூர்த்தி : காதல் என்னும் போதை யுண்டோம் !
கண்ணே இன்பம் கொண்டோம்
ஜாதியென்னும் பேயை வெல்லும்
அஞ்சா நெஞ்சம் கொண்டோம்

| | |
|---|---|
| மேரி : | லாலியே பாடி ஜாலியாய் ஓடி நாளுமே ஆடுவோம் |
| சூரியமூர்த்தி : | பாலுடன் தேனும் பாகுமே சேர்ந்த<br>பான்மையாய்—கூடுவோம். |
| மேரி : | ஆதம் ஏவாள் போலவே |
| சூரியமூர்த்தி : | இராதா கிருஷ்ணன் போலவே |
| மேரி : | நாதம் கீதம் போலவே |
| இருவரும் : | நாமும் ஒன்றாய் வாழுவோம் ! |
| மேரி : | ரிண்டிண் டாண் ஹுலா ஹுலா<br>டகுடிகு டகுடிகு டகுடிகு டகுடிகு |
| சூரியமூர்த்தி : | ரிண்டிண் டாண் ஹுலா ஹுலா<br>டகுடிகு டகுடிகு டகுடிகு டகுடிகு |
| சூரியமூர்த்தி : | நீல வான மீதிலே உலாவும் கிள்ளை ஜோடிபோல் |
| மேரி : | மாலையில் உலாவுவோம் ! சோலையில் குலாவுவோம்.<br>நீலப் பொய்கையில் நீந்தும் அன்னம் போல் நாமும்<br>ஓடத்தின் மீதே. . . . . |
| இருவரும் : | மாலையில் உலாவுவோம் சோலையில் குலாவுவோம். |
| மேரி : | ஆசை போலவே . . . . . |
| சூரியமூர்த்தி : | ஆகும் யாவுமே . . . . . |
| இருவரும் : | மாசில்லாத நேசத்தாலே<br>மனம் போலே சுகம் பெறுவோமே. |
| | ரா ர ரா . . . . ரம்பம் பம் . . . . |
| மேரி : | இல்லறம் ஒன்றுதான் |
| சூரியமூர்த்தி : | நல்லறம் என்ற தோர் |
| இருவரும் : | வள்ளுவன் வார்த்தையே<br>வாழ்வின் கீதமாம். |

*By*—A. மருதகாசி.

## *10. சூரியமூர்த்தி.*

வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் புவி
மக்களெல்லாம் ஒப்புடையார்
ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ இதை
இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ ?

கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளையடிப்பதும் நீதியோ ?
புவி வாழ்வது தான் எந்த தேதியோ ?

சிற்சிலர் வாழ்ந்திட பற்பலர் உழைத்துத்
தீர்க எனும் இந்த லோகமே
உறுவற்றொழிந்தாலும் நன்றாகுமே

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்
அவன் காணத்தகுந்தது வறுமையோ ?
அவன் பூணத்தகுந்தது பொறுமையோ ?

மக்களெல்லாம் சமமாக அடைந்திட
மானிலம் தந்ததில் பஞ்சமோ !
பசிமிக்கவரின் தொகை கொஞ்சமோ !

*By*—பாரதி தாசன்.

## *11. பின்னணிப் பாட்டு.*

[தொகையறு]

வறுமைப் புயலாலே துயரக்கடல் மேவும்!
வாழ்க்கைப்படகு கவிழும் !—ஆனால்
மறுமையிலும், இம்மையிலும் மங்காத ஜோதியாய்
மனிதா உன்புகழ் உலாவும்!

[பாட்டு]

கருவிலே உருவான காயம் !—இதில்
கலந்துள்ள உயிர்நாடி கணப்போதில் ஓயும் !—இந்த
பிறவியில் நீ செய்யும் தியாகம் !—உடல்
மறையினும் அழியாது வான்ஜோதியாகும் ! [கருவிலே]

பிறவியின் பயன் இங்கு மனிதா !—உடன்
பிறந்தார்க்கு நீ செய்யும் சேவைதான் புனிதா !
தெருவிலே அலைந்தாலும், தீமையே விளைந்தாலும்
பெருமையை இழந்தாலும் கடமையை மறவாதே !
[கருவிலே]

கடலினும் ஆழ்ந்தது நேசம் !—கஷ்டம்
வந்தாலும் மாறுதடா ரத்தபாசம்
கொடுமையின் குகையடா உலகம் !—மனங்
குமுறாதே மனிதா! உன்புகழ் என்றும் நிலவும் !




எதிர்பாருங்கள்

# எமது அடுத்த படம்

A.P. (Madras) Ltd., Madras.

விலை ஒரு அணா